அதை மீண்டும் பரிசீலனை செய்து, புதிய வண்டிகளாக விடுவதற்கும், ஏனைய நிறுத்தப்பட்ட 4 பேருந்துகளை விடுவதற்கும் உடனடியாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் உடனடியாக செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.35

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சிங்காரம் போன்ற கடமை உணர்ச்சியோடு தொகுதிக்கு பணியாற்றக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசைப் பொறுத்தவரையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அரசு, மிக விரைவாக உங்களுக்குச் சிறந்த பேருந்துகளை, வேண்டியப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும். அதேபோல், இந்த வழித்தடங்களில் பேருநதுகள் நிறுத்தப்பட்டதற்குக் காரணம் புயல் வெள்ளத்தின் காரணமாக 20-ம் தேதியிலிருந்து 25-ஆம் தேதி வரை 5 நாட்கள் மட்டும்தான் அந்தப் பேருந்துகளை அங்கே இயக்க முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறப்பான முறையிலே தொகுதிக்கு பணியாற்றக்கூடியவர்கள். கடமையுணர்வோடு சட்டமன்றத்திற்கு வரக்கூடியவர். ஆகவே கடமையுணர்வோடு உங்களுடைய பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்பு

கவன ஈர்ப்புக்குரிய பதில்கள் வரப்பெற்றவுடன் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்தமட்டில், உறுப்பினர்கள் கொடுத்த அனைத்து கவன ஈர்ப்புத் தீர்மானங்களும் அரசுக்கு அனுப்பப்பட்டு இன்றுவரை கிடைத்திருக்கிற பதில்களை வைத்து, இன்றைக்கு 7 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் பேரவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. தொகுதி சம்பந்தமாக கொடுத்த உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் கடமையுணர்வோடு வந்து தொகுதிப் பிரச்சினையை எழுப்பாவிட்டாலும், பேரவையைப் பொறுத்தமட்டில் கொடுத்த உறுப்பினர்களுடைய பிரச்சினைகள் அனைத்தும் அரசுக்கு அனுப்பப்பட்டு பதில்கள் பெறப்பட்டிருக்கின்றன. பெற்ற வரையிலும், துறைக்குக் கிடைத்த பதில்கள் வரையிலும், இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இனிமேல் பதில்கள் வந்தவுடன்

ஏனைய கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கும் உரிய பதில்கள் அந்தந்த உறுப்பினர்களுடைய முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

6. காங்கிரஸ் கட்சியின் நிலை குறித்து அக்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களின் விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. நரசிம்மராவ் அவர்கள் நல்ல உணர்வோடு நம்முடைய தமிழக அரசு எடுக்கின்ற அத்தனை திட்டங்களுக்கும் உதவியளிக்கின்ற வகையில் மிகவும் சிறப்பான முறையில் நல்ல உணர்வோடு, நம்முடைய தமிழகத்தினுடைய முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி திட்ட ஒதுக்கீடு சம்பந்தமாக கோரிக்கை எழுப்புகின்றபோது 2,750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, இந்த தமிழக முதலமைச்சரும், நம்முடைய அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. நரசிம்மராவ் அவர்களும் நல்ல உணர்வோடு இருக்கின்ற இந்த நேரத்தில், அங்கே டெல்லி பாராளுமன்றத்திலும், இன்னும் சில நிகழ்ச்சிகளிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்திற்கும், திரு. நரசிம்மராவ் தலைமைக்கும் சிறந்த முறையில் ஒத்துழைப்பு கொடுத்த காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் மனப்பூர்வமாக பாராட்டுகின்ற அதே வேளையில், இந்தத் தமிழகத்திலும், இந்த தமிழக அரசு எடுக்கின்ற எல்லாவித நல்ல நடவடிக்கைகளுக்கும் நியாயமான நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும் என்பதுதான் அங்கே இருக்கின்ற உணர்வுபோல் இங்கேயும் எங்களுக்கு உண்டு. அந்த வகையிலே ஒரு சிலருக்கு மாறுபட்ட எண்ணம், வேறுபட்ட உணர்வுகள் இருந்தாலும்கூட, காங்கிரஸ் இயக்கத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய ஒப்பற்ற தலைவர் திரு. நரசிம்மராவ் அவர்களைப் பொறுத்தவரையில் இங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் பேரியக்கமும் இரண்டற கலந்திருக்க வேண்டுமென்ற உணர்வைத்தான் கொண்டிருக்கிறோம் என்பதை உங்கள் மத்தியிலே கூறி, வேறு யாரும் பேசுகின்றதற்கெல்லாம் அநாவசியமான இடங்களுக்கு நீங்கள் இடம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மட்டும் கூறி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்று நான்கூட அதைத்தான் சொன்னேன். அப்பேர்ப்பட்ட அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர், பாரதப் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் வழிகாட்டுதல்படி இங்கே இருக்கிறவர்கள் நடக்காமல் போகிறார்களே, வேறு யாரையோ